ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1791/33 - 2013 ජනවාරි මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.01.03
*1791/33 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**காரீயத் தொழிலுக்கான சம்பளச் சபை**

(136 ஆம் அத்தியாயமாகிய ) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் கீழ் காரீயத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, இவ்வறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ளவாறான தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சரவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012, திசெம்பர் 21.

**அட்டவணை**

காரீயத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1944 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதிய 9224 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்கு காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் அட்டவணையினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்துதல் வேண்டும்:-

"பகுதி II

நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டிருக்கும் வேலையாட்களுக்கு ஏற்புடைத்தான சாதாரண வேலை நாளொன்றிற்கான ஆகக்குறைந்த நாளாந்த சம்பள விகிதங்கள் நிரல் II இல் காட்டப்பட்டவாறான விகிதங்களாக அமைதல் வேண்டும் :-

**நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள விகிதங்கள்**

| நிரல் I<br>வேலையாட்களின் வகுப்பு | நிரல் II<br>சாதாரண நாளொன்றிற்கான அடிப்படை விகிதம்<br>ரூபா. சதம் |
|---|---|
| **நிலத்தின் கீழ் தொழிலாற்றும் வேலையாட்கள் :** | |
| துளையிடுபவர்கள் (கை மற்றும் இயந்திரம்) | 882.00 |
| வெடிக்க வைப்பவர்கள் | 882.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*வேலையாட்களின் வகுப்பு* | *நிரல் II*<br>*சாதாரண நாளொன்றிற்கான அடிப்படை விகிதம்*<br>*ரூபா. சதம்* |
|---|---|
| சுரங்க செல் குழாய் செலுத்துநர் | 882.00 |
| மரம் வெட்டுபவர் | 882.00 |
| நிறுத்துநர்கள் (அகழ்பொறி) | 882.00 |
| தடை அகற்றுவோர் | 688.00 |
| கம்பிச்சுருளைக் கையாள்பவர் | 688.00 |
| முறைமாற்றும் தொழில் முதல்வர்கள் | 915.00 |
| கண்காணிப்பவர்கள் மற்றும் கண்காணிமார் | 974.00 |
| பாஸ்மார் | 1,176.00 |
| பாரம் ஏற்றுபவர்கள் | 974.40 |
| தேர்ச்சியற்ற தொழிலாளிகள் | 688.00 |
| பொருத்துபவர்கள் மற்றும் 'தோனகட்டகாருவோ' | 974.40 |
| **நிலத்தின் கீழ் தொழிலாற்றும் மற்றும் தள வேலையாட்கள் :** | |
| பழுதுபார்ப்பவர், பொருத்துநர்கள், இலத்திரனியாளர் | 1,075.20 |
| உதவியாளர்கள் (பழுதுபார்ப்பவர், பொருத்துநர்கள், இலத்திரனியாளர்) | 688.80 |
| திருகு உருளைப்பொறி நபர்கள் மற்றும் பாரந்தூக்கும் நபர் | 1,075.20 |
| பாரந்தூக்கும் இயந்திர நபர்கள் | 688.80 |
| பரிசோதகர்கள் | 974.40 |
| குழாய் நபர்கள் | 1,075.20 |
| பொறி நபர்கள் | 1,075.20 |
| **தள வேலையாட்கள் :** | |
| தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் | 537.00 |
| உலோக வேலை செய்பவர்கள் | 822.00 |
| துளை செப்பனிடுவோர் | 822.00 |
| பட்டறை பையன்கள் | 588.00 |
| வெப்பமேற்றும் நபர்கள் | 882.00 |
| மரவேலை செய்பவர்கள் | 1,075.00 |
| மேசன்மார்கள் | 1,075.00 |
| வண்டில் செலுத்துபவர் | 688.80 |
| காவற்காரர்கள் | 688.80 |
| கண்காணிப்பாளர்கள் | 974.40 |
| விறகு எடுத்துச் செல்பவர்கள் மற்றும் பிரிப்பவர்கள் | 722.40 |
| சமையற்காரர்கள் | 588.00 |
| 'பக்கிகாறயாஸ்' அல்லது வங்கி நபர்கள் | 879.00 |
| **நிறைவான பொருளை ஆக்குவதனுடன் தொடர்புபட்ட பின்வருகின்ற வேலையில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாட்கள்** | |
| (அ) பொதி செய்தல், தரம் பிரித்தல், சிராய்த்தல், நொருக்குதல், அரித்தெடுத்தல், மாற்றுதல், கழுவுதல், மினுக்குதல், வகுப்பிடல், காரியத்தை அனுப்புதல், பைகளை ஆக்குதலும் தைத்தலும், நிரப்பிய பைகள் மற்றும் நிரப்பாத பைகள் | 588.00 |
| (ஆ) கண்காணிப்பாளர்கள் மற்றும் கண்காணிகள் | 882.00" |

1 - 520/1

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

*அறிவித்தல்*

## மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழில்

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத்தீர்மானங்கள், 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில். தொழில் உறவுகள் அமைச்சு.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012, திசெம்பர் 21.

### அட்டவணை

*மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டதும், 1999 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 1099/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டவையும் காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டதும் இறுதியாக 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதிய 1668/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள் அவ்வட்டவணைக்குப் பதிலாக பின்வரும் பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும் :-*

### "தொழிலாளர் வகுப்பு

**1. தேர்ச்சித் திறனுள்ளோர் :**

*பிரிவுத் தலைவர்கள், நானாவித இயந்திர இயக்குநர்கள், வடிவமைப்போர், சார்ஜ் ஹேண்டர்ஸ் (charge handers), போறணை இயந்திர இயக்குநர்கள், அடுப்பு (oven) இயக்குநர், சிரேஷ்ட மின்தூக்கி இயக்குநர், அச்சுருவங்கள் அமைப்போர், ஆராய்ச்சி உதவியாளர்கள், சிற்பங்களை அமைப்போர், படவரைஞர்கள், செவ்வை பார்ப்போர், மின்னுட்பவியலாளர்.*

**2. ஓரளவு தேர்ச்சியுள்ளோர் :**

*உதவி அச்சுருவங்களை அமைப்போர், நிறம் தீட்டுவோர் (ஸ்பிறே பண்ணுவோர், டிப்பர்ஸ்), தெரிவுசெய்வோர், கனிஷ்ட மின்தூக்கி இயக்குநர், மெருகூட்டுநர், பொதி செய்வோர், பொருட்களை சுத்தஞ்செய்வோர், ஸ்ரிக்கர்ஸ் ஒட்டுவோர், ஷவல் லோடர் (shovel loader) இயக்குநர், உதவி இயந்திர இயக்குநர், மின்சார உற்பத்தி இயந்திர இயக்குநர், உதவி அடுப்பு (oven) இயக்குநர்.*

**3. தேர்ச்சியற்றோர் :**

*சுத்திகரிப்போர், உதவியாளர்கள், சாதாரண வேலையாட்கள், தோட்ட வேலையாளர்கள், இவற்றையொத்த ஏனைய சேவைகளில் ஈடுபட்டுள்ளோர்.*

**4. பயிலுனர்கள் :**

இரண்டு ஆண்டுகால பயிற்சி வரையறையின் கீழ் பல்வேறு துறைகளிலும் பயிற்சி பெறுவோர்.

**மாதமொன்றுக்கு வழங்கப்படவேண்டிய ஆகக்குறைந்த சம்பள அளவு**

| சேவை ஆண்டு | தேர்ச்சியுள்ளோர் ரூ. ச. | ஓரளவு தேர்ச்சி திறனுள்ளோர் ரூ. ச. | தேர்ச்சித்திறன் அற்றோர் ரூ. ச. | பயிலுனர் ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 10,300.00 | 9,600.00 | 8,970.00 | 5,460.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,450.00 | 9,725.00 | 9,070.00 | 5,560.00" |
| 3 ஆம் ஆண்டு | 10,600.00 | 9,850.00 | 9,170.00 | |
| 4 ஆம் ஆண்டு | 10,750.00 | 9,975.00 | 9,270.00 | |
| 5 ஆம் ஆண்டு | 10,900.00 | 10,100.00 | 9,370.00 | |

1- 520/2

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**பதிக் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1)(அ)ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சர் அவர்களினால் ஆக்கப்பட்டு, 1979 ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆம் திகதிய 48 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் தொழில் ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 33(2) ஆம் பிரிவின் கீழ் பதிக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தொடர்பாக இதனுடன் உள்ள அட்டவணையிற் காணப்படும் நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள அளவு தொடர்பான தீர்மானம், கௌரவ தொழில், தொழில் உறவுகள், அமைச்சரவர்களால் அங்கீகரிக்கப்பட் டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 33(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானம், 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யு. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள், அமைச்சு.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5.
2012, திசெம்பர் 21.

**அட்டவணை**

தொழில் ஆணையாளரால் பதிக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் தொடர்பாக நிறைவேற்றப்பட்டதும், 1979ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 64/22 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளனவும் 2010 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 1656/ 10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் இறுதியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளனவுமான தீர்மானங்கள், அவ்வட்டவணைக்கு கீழ்க் காணப்படும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும்

வேறுபடுத்தப்படுதல் வேண்டும். பத்திக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு I வது நிரலில் குறிப்பிட்டுள்ள நேர வேலைக்கு உரித்தான ஆகக் குறைந்த சம்பள வீதம் II வது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாதல் வேண்டும் :-

| *"நிரல் I* | *நிரல் II*<br>*சாதாரண வேலைநாள் ஒன்றிற்குரிய சம்பள வீதம்* |
|---|---|
| *(அ) சித்திரம் வரைவோர், வடிவுருவங்களமைப்போர்* | *525.00* |
| *(ஆ) வெள்ளாவியிடுவோர், சாயமிடுவோர்* | *450.00* |
| *(இ) இஸ்திரிக்கையிடுவோர், உருவப்பிரதி செய்வோர், மெழுகிடுவோர்* | *412.50* |

**சாதாரண வேலை நாள்**

*சாதாரண வேலை நாள் ஒன்றில் அடங்கியிருக்கும் மணித்தியாலங்கள் (உணவுக்கான அல்லது ஓய்வுக்கான மணித்தியாலம் ஒன்று உட்பட)*

| | | |
|---|---|---|
| *(அ)* | *சனிக்கிழமை தவிர்ந்த பிற நாட்களில்* | *9 மணித்தியாலங்கள்* |
| *(ஆ)* | *சனிக்கிழமை நாட்களில்* | *6 மணித்தியாலங்கள்"* |

*1- 520/3*

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

***இறப்பர் (தயர், தியூப் உற்பத்தி, தயர் மீளப்புனைதல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம் றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழில்***

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி கீழ் இறப்பர் (தயர், தியூப் உற்பத்தி, தயர் மீளப்புனைத்தல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம், றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

இத்தீர்மானங்கள் 2013, ஆம் ஆண்டு சனவரி, மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012, திசெம்பர் 21.

**அட்டவணை**

இறப்பர் (தயர், தியூப் உற்பத்தி, தயர் மீளப்புனைதல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம் றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 14,831 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டு காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவாறானவும் 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டதுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில் "மாதமொன்றுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஆகக்குறைந்த சம்பள அளவு" என்னும்

தலையங்கத்தின் கீழ் காணப்படும் பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

**"II ஆம் பாகம்**

**மாதமொன்றுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஆகக்குறைந்த சம்பள அளவு**

| ஊழிய ஆண்டு | தேர்ச்சியற்றோர் ரூ. ச | ஓரளவு தேர்ச்சி உடையோர் ரூ. ச | தேர்ச்சி பெற்றோர் ரூ. ச | தொழிற்பயிற்சி பெறுவோர் தொழில் பயிலுநர் ரூ. ச |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 9,315 00 | 9,720 00 | 10,125 00 | 5,520 00 |
| 2 ஆம் ஆண்டு | 9,415 00 | 9,845 00 | 10,275 00 | 5,720 00 |
| 3 ஆம் ஆண்டு | 9,515 00 | 9,970 00 | 10,425 00 | 5,920 00 |
| 4 ஆம் ஆண்டு | 9,615 00 | 10,095 00 | 10,575 00 | 6,120 00" |
| 5 ஆம் ஆண்டு | 9,715 00 | 10,220 00 | 10,725 00 | |
| 6 ஆம் ஆண்டு | 9,815 00 | 10,345 00 | 10,875 00 | |
| 7 ஆம் ஆண்டு | 9,915 00 | 10,470 00 | 11,025 00 | |
| 8 ஆம் ஆண்டு | 10,015 00 | 10,595 00 | 11,175 00 | |
| 9 ஆம் ஆண்டு | 10,115 00 | 10,720 00 | 11,325 00 | |
| 10 ஆம் ஆண்டு | 10,215 00 | 10,845 00 | 11,475 00 | |
| 11 ஆம் ஆண்டு | 10,315 00 | 10,970 00 | 11,625 00 | |
| 12 ஆம் ஆண்டு | 10,415 00 | 11,095 00 | 11,775 00 | |
| 13 ஆம் ஆண்டு | 10,515 00 | 11,220 00 | 11,925 00 | |
| 14 ஆம் ஆண்டு | 10,615 00 | 11,345 00 | 12,075 00 | |
| 15 ஆம் ஆண்டு | 10,715 00 | 11,470 00 | 12,225 00 | |
| 16 ஆம் ஆண்டு | 10,815 00 | 11,595 00 | 12,375 00 | |
| 17 ஆம் ஆண்டு | 10,915 00 | 11,720 00 | 12,525 00 | |
| 18 ஆம் ஆண்டு | 11,015 00 | 11,845 00 | 12,675 00 | |
| 19 ஆம் ஆண்டு | 11,115 00 | 11,970 00 | 12,825 00 | |
| 20 ஆம் ஆண்டு | 11,215 00 | 12,095 00 | 12,975 00 | |
| 21 ஆம் ஆண்டு | 11,315 00 | 12,220 00 | 13,125 00 | |
| 22 ஆம் ஆண்டு | 11,415 00 | 12,345 00 | 13,275 00 | |
| 23 ஆம் ஆண்டு | 11,515 00 | 12,470 00 | 13,425 00 | |
| 24 ஆம் ஆண்டு | 11,615 00 | 12,595 00 | 13,575 00 | |
| 25 ஆம் ஆண்டு | 11,715 00 | 12,720 00 | 13,725 00 | |

1- 520/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.